**சென்னை சரணாகதி மந்திரிகள்.**

**இன்னும் எத்தனை நாள்?**

**இன்றைக்கு 322-வது நாள்.**


# விடுதலை.

ஈரோடு 1938-ஆ ஜூன்-மீ 1 உ புதன்கிழமை.


# ஹிந்தி கட்டாயபாட மர்மம்.

ஒரு தேசம் என்றால் ஒரு தேசியப் பொது மொழி வேண்டாமா? பெரும்பாலோர் பேசும் மொழிதானே பொது மொழியாக இருக்கவேண்டும்! ஹிந்திதானே பெரும்பாலோர் பேசும் மொழி. ஹிந்தியும் ஒரு இந்திய பாஷைதானே! அன்னிய பாஷையான இங்கிலீஷை முணுமுணுப்பின்றி ஏற்றுக்கொண்ட தமிழர் ஹிந்தியைப் பற்றிமட்டும் ஏன் புகார் செய்யவேண்டும்? மலையாளர் ஹிந்தியை எதிர்க்கவில்லையே! தெலுங்கர் எதிர்க்கவில்லையே! கன்னடர் எதிர்க்கவில்லையே! என்கின்றனர் தேசபக்தர்களான பார்ப்பனர். தமக்குப் பிற்காலத்தில் நேரப் போகும் ஆபத்தை உணர சக்தியில்லாதவர்களும், உணர்ந்தும் சுயநலம் காரணமாக அவ்வுணர்ச்சியை வெளியிடத் தைரியமில்லாதவர்களும், தமிழ் மொழி எக்கேடு கெட்டாலென்ன பார்ப்பனர் தயவினால் தமக்குக் கிடைத்திருக்கும் பதவிகளுக்கும் பெருமைகளுக்கும் குறைவேற்படாமல் இருந்தால் போதுமென்றெண்ணும் போலித் தமிழர்களும் பார்ப்பன தேசபக்தர்கள் கூறும் நியாயங்களையே கிளிப்பிள்ளை போல் எடுத்துக்கூறிவருகிறார்கள். ஆகவே இவைகளுக்கெல்லாம் தக்க சமாதானம் கூற வேண்டியது நமது கடமையென நினைக்கிறோம். அவைகளுக்கு சமாதானம் கூற இதுவே தக்க சமயமென்றும் கருதுகிறோம்.

## காங்கரஸ் பதவியேற்ற நோக்கம்.

சமாதானம் கூற முயலுமுன் தமிழர்களின் தற்கால நிலையையும் காங்கரஸ் பதவியேற்ற சந்தர்ப்பத்தையும், நோக்கத்தையும் நாம் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். தம் இனத்தார் பட்டங்களும் பதவிகளும் பெறுவதற்கு காங்கரஸை ஒரு கருவியாக உபயோகித்து வந்த பார்ப்பனர்கள், பிரிட்டிஷாரின் தாராளக் கொள்கையினால் எல்லாச் சாதியாரும் கல்வி கற்று பட்டம் பதவிகள் பெற்று முன்னேற்றமடைந்து வருவதைக் காணப் பொறாதவர்களாகி, பிரிட்டிஷ் ஆட்சியையே ஒழித்துவிட்டு பழைய ராமராஜ்யத்தை—மநுதர்ம ராஜ்யத்தை ஸ்தாபிப்பதென முடிவு செய்து கொண்டு தேச விடுதலையின் பெயரால் பிரிட்டிஷ் சர்க்காருக்கு எதிரிடையாக காங்கரஸ் மூலம் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். பார்ப்பனர்களின் அந்தரங்க நோக்கத்தை அறியாமல் ஏனைய ஜாதியாரும் அக்கிளர்ச்சியில் கலந்துகொண்டனர். இந்தியர்களை சுய ஆட்சிக்குப் பழக்குவதை லக்ஷ்யமாகக் கொண்டு வேலை செய்து வந்த பிரிட்டிஷாரும் படிப்படியாக இந்தியர்களுக்குச் சீர்திருத்தங்களை வழங்கி வந்தனர். காங்கரஸ் பார்ப்பனர் திருப்தியடையாமல் மேலும் மேலும் கிளர்ச்சி செய்ததின் பயனாக மாண்டு—போர்டு சீர்திருத்தம் என்ற இரட்டையாட்சி முறை அமலுக்கு வந்தது. இந்திய மக்களில் பெரும்பாலார் அதாவது 100க்கு 97-பேர் அரசியல் உணர்ச்சியோ, கல்விப்பயிற்சியோ இல்லாதிருக்கையில் பூரணப் பொறுப்பாட்சியோ இரட்டையாட்சியோ வழங்குவது குறிப்பிட்ட ஒரு சாராருக்கே—அதாவது மதத்தின் பேரால் ஏற்கனவே சமூக வாழ்வில் முன்னணியில் நிற்கும் பார்ப்பனர்களுக்கே பெரிய அனுகூலமாக முடியுமென்பதையுணர்ந்த மதியூகிகளான டாக்டர் மாதவன நாயரும், ஸர். பி.தியாகராய செட்டியாரும் ஜஸ்டிஸ் இயக்கம் கண்டு பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களைத் தட்டி எழுப்பினர்.

## பார்ப்பனர் சூழ்ச்சி.

மாண்டு—போர்டு சீர்திருத்தம் மூலம் எல்லாச் சாதியாருக்கும் நலன் விளையப் போவதையுணர்ந்த காங்கரஸ் பார்ப்பனர்கள் இரட்டையாட்சிச் சீர்திருத்தம் பயனற்றதென்றும் இந்தியர் கோரிக்கையைப் பூர்த்தி செய்யக்கூடியதல்லவென்றும் பொய்க்காரணங்கூறி மாண்டு—போர்டு சீர்திருத்தத்தை பகிஷ்கரித்தனர். புதுச் சீர்திருத்தப்படியுள்ள முதல் சட்டசபைத் தேர்தலில் கலந்து கொள்ளவில்லை. ஆகவே, ஜஸ்டிஸ் கட்சியாரே பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பார்ப்பனரல்லாத மந்திரி சபையும் ஸ்தாபனமாயிற்று. பார்ப்பனரல்லாதார் முன்னேற்றக் கருதித் தோற்றுவிக்கப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி பெயரளவில் ஒரு வகுப்புக் கட்சியாகத் தோன்றினாலும் கிரியாம்சையில் தேசிய நோக்குடனே அரசியல் வேலைகளை நடத்தி வந்தது. பார்ப்பனர் நீங்கலாகவுள்ள இதர சமூகத்தார் முன்னேற்றத்துக்குத் தடையாக இருந்தவைகளையெல்லாம் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிமார் நீக்க முற்பட்டனர். அதன் பயனாய் சமூக வாழ்வில் பின்னணியில் நின்றவர்களும் முன்னேற்றமடையத் தொடங்கினர். ஆதிதிராவிட முன்னேற்றத்துக்கான பல ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. உத்தியோக நியமன விஷயத்தில் வகுப்புவாரி விதாச்சார முறை ஒப்புக் கொள்ளப்பட, ஒவ்வொரு சமூகத்தாரும் அவரவர் ஜனத் தொகைக்குப் பொருத்தமாக உத்தியோகங்கள் பெறலாயினர். ஏனைய சமூகத்தார் உத்தியோகங்கள் பெறத் தொடங்கியவுடன் பார்ப்பனர் அக்காலத்து அனுபவித்து வந்த ஏகபோக உரிமைக்குப் பங்கம் ஏற்பட்டது. மற்றும் ஒடுக்கப்பட்டும் அரசியல் உணர்ச்சியற்றும் கிடந்தவர்கள் ஜஸ்டிஸ், சுயமரியாதை கட்சித் தலைவர்கள் செய்த பிரசாரங்களின் பயனாய் சுதந்தர உணர்ச்சி பெறத் தொடங்கினர். எனவே பார்ப்பனர்களுக்கு சமூக வாழ்வில் இருந்த செல்வாக்கும் மதிப்பும் குறையலாயின. ஜனத் தொகையில் 100க்கு 3 கொண்ட பார்ப்பனர் சமூக வாழ்விலும் அரசியலிலும் ஆதிக்கம் பெறுவதற்குக் காரணங்களாயிருந்தவைகள் எல்லாம் ஒழிக்கப்படுவதைக் கண்ட பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்தாலன்றி தென்னாட்டிலே பார்ப்பனர்களுக்கு வாழ்வில்லையென முடிவு செய்தனர். ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க காங்கரசை ஒரு கருவியாகவும் உபயோகிக்கலாயினர். மாண்டு-போர்டு சீர்திருத்தம் அமலில் வந்த நாள் முதல் மாகாண சுய ஆட்சி ஆரம்பமாகும்வரை பார்ப்பனரல்லாத மந்திரிகளே தேச நிர்வாகம் நடத்தி வந்ததினால் மேற்கொண்டு பார்ப்பனரல்லாதார் முதன் மந்திரியாக ஒரு பொழுதும் வரக்கூடாதென்றும் முடிவு கட்டிக்கொண்டனர்.

## பொய்ப் பிரசாரம்.

ஆகவே புதிய சீர்திருத்தம் பயனற்றதென்றும் அதை ஒழிப்பதே தங்கள் லக்ஷ்யம் என்றும் பிரதிநிதித்துவ சபை கூட்டி, எதிர்கால அரசியலை நிர்ணயம் செய்யப்போவதாகவும் கூறிக் கொண்டு பிரசாரம் செய்தனர். அதுவரை அமல் நடத்தி வந்த ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் மீதும் வண்டிக்கணக்கான பழிகளைச் சுமத்தினர். பதவியேற்பதுபற்றி அப்பொழுது முடிவு செய்யவில்லையாயினும் காங்கரஸ் பதவியேற்றால் வரிகளைக் குறைப்பதாயும் மண்ணுலகைப் பொன்னுலகமாக்குவதாயும் பொய்ப்பிரசாரம் செய்தனர். சுமார் 16-வருஷ காலம் அமல் நடத்தி வந்த ஜஸ்டிஸ்கட்சியார் மீது பாமர மக்களுக்கும் அதிருப்தி ஏற்பட்டிருக்கக்கூடும். ஆகவே சென்ற தேர்தலில் காங்கரஸ்காரரே பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட, கனம் ஆச்சாரியார் மந்திரிசபையும் ஸ்தாபனமாயிற்று.

## வர்ணாச்சிரமத்துக்கு நாட்கால்.

கனம் ஆச்சாரியார் மந்திரி சபை ஸ்தாபித்த முறையை நாமும் விளக்கிக் கூறத் தேவையில்லை. ஒரு காங்கரஸ்வாதியான பாரிஸ்டர் எஸ். வி. ராமசாமியே ஆச்சாரியார் மந்திரி சபைக்கு அக்ரகார மந்திரிசபை எனப் பெயர் சூட்டியிருக்கையில் நாமும் அதிகம் கூறிப் பயன் என்ன? பிரதம மந்திரிகனம் ஆச்சாரியார் இயல்பை தென்னாட்டார் நன்கறிவர். தமது ஆட்சிக் காலத்தில் வருணாச்சிரம ராஜ்யத்துக்கு நாட்கால் நாட்டி ஜஸ்டிஸ் கட்சியார் இனி எந்நாளும் தலை தூக்க முடியாதபடி செய்து விட வேண்டுமென்பதே அவரது ஜீவித லக்ஷ்யம். அந்த லக்ஷ்யத்தை முன் நிறுத்தியே அவர் ஒவ்வொரு காரியமும் செய்து வருகிறார். புதுச் சீர்திருத்தப்படி பாமர மக்களுக்கும் வாக்குரிமை கிடைத்திருப்பதினால் அவர்களைமயக்கி அவர்கள் ஆதரவை எந்நாளும் பெறும் பொருட்டு மாரட்டோரியம் மசோதாதாவை முதன் முதலில் நிறைவேற்றி வைக்க முயன்றார். அது பார்ப்பனர்களுக்குத் தீமை விளைக்கப் போவதை உணர்ந்த பார்ப்பன வக்கீல்கள் தீவிரமாக கிளர்ச்சி செய்யவே சர்க்கார் கஜட்டில் பிரசுரமான அம் மசோதாவைக் கை நழுவ விட்டு விட்டு விவசாயிகள் கடன் நிவாரண மசோதாவைச் சட்டமாக்கினார். அதன் தீமைகளை ஒரு காங்கரஸ்வாதியான சுதேசமித்திரன் ஆசிரியர் தோழர் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸனே வெட்ட வெளிச்சமாக்கியிருப்பதினால் நாமும் விளக்கத் தேவையில்லை. அப்பால் பார்ப்பனரல்லாதார் கல்வி முன்னேற்றத்துக்குத் தடையேற்படுத்தும் மார்க்கங்களைத் தேடலுற்றார். சேலத்தில் மதுவிலக்கை அமலுக்குக் கொண்டு வந்தார். அதனால் ஏற்படும் நஷ்டத்தைப் பரிகரிக்க கல்வி மானியங்களை நிறுத்தினார். வரவு செலவுகளைச் சரிக்கட்டாத மத்தியதரப் பள்ளிக்கூடங்களை மூடிவிட ஏற்பாடு செய்தார். கலாசாலை செலக்ஷன் போர்டுகளை நிறுத்தல் செய்து பார்ப்பனரல்லாதார் கலாசாலைக் கல்வி பெறுவது அசாத்தியமாகும்படி செய்தார். இப்போது ஹிந்தியைக் கட்டாயபாடமாக்கிதமிழ் நாட்டை என்றென்றும் ஆரியர்களுக்கு அடிமைப்பட்ட நாடாக்க ஏற்பாடு செய்து விட்டார். அதனாலேயே ஹிந்தியை விட ஹிந்தியைப் புகுத்தும் மனப் பான்மையே மகா தீமையானதென்றும் ஹிந்தி எதிர்ப்பின் நோக்கம் அந்த மனப்பான்மையை ஒழிப்பதே என்றும் சோழவந்தான் மகாநாட்டிலே தோழர் தளவாய் முதலியார் வீர முழக்கம் செய்தார்.

காளை, இந்தியாவுக்கு ஒரு தேசிய பாஷை அவசியமா? அவசியமானால் தேசிய பாஷையாக இருக்க லாயக்குடையது, எது? தேசிய பாஷை வகுக்கும் காலம் எது, அதிகாரமுடையவர்கள் யார்? என்பனவற்றைப்பற்றி எழுதுவோம்.

## ஈரோடு சேர்மன் கவனிப்பாரா?

—:(*):—

ஈரோடு நகரசபையில் தேசபக்தர்கள் மெஜாரட்டி பெற்றுவிட்டதினால் நமது குறைகள் எல்லாம் நீங்கி விட்டன என்று வாக்காளர் நம்பியிருந்தார்கள். ஆனால் அவர்கள் நம்பிக்கையெல்லாம் வீணாகி விட்டது. முதன் முதலில் ஜீவாதாரமான தண்ணீருக்குத்தான் திண்டாட வேண்டியிருக்கிறது. இரண்டு மூன்று நாளாய் கச்சேரி ரோடு வீதியிலுள்ள குழாய்களில் தண்ணீர் வருவதே இல்லை. பதிவாகத் தண்ணீர் வரும் நோங்களில் தண்ணீர் பிடிக்கும் பொருட்டு குழாய்களுக்குச் செல்லும் பெண்கள் வெகு நேரம் காத்திருந்து விட்டு ஏமாந்து திரும்புகிறார்கள். எப்போதாவது தண்ணீர் வந்தால் சில நிமிஷ நேரங்களில் நின்று விடுகிறது. காங்கரஸ் சேர்மன் அவர்கள் இவ்விஷயங்களைக் கவனிப்பாரா? தண்ணீர்ப் பஞ்சம் ஒழியுமா?

ஒரு வாக்காளன்.

## நீலகிரி ஜில்லா போர்டு தேர்தல்

### காங்கரஸ்காரர்கள் படுதோல்வி

### ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றி.

(ஒரு நிருபர்)

கூடலூர், மே. 31

ஷை ஜில்லா போர்டுக்கு கூடலூர் தாலூகாவுக்கு சுயேச்சையாக கேப்டன் ஆர். ராஜகோபாலன் எல். எம். அண்டு எஸ் அவர்கள் நின்றார். இவரை காங்கரஸ் டிக்கட்டில் தோழர் எஸ். சந்திரசேகரன் எதிர்த்தார். கேப்டன் ராஜகோபாலன் அவர்களுக்கு 199 வோட்டுகளும் காங்கரஸ் அபேட்சகருக்கு 111 வோட்டுகளும் கிடைத்ததால் முன்னவர் வெற்றிபெற்றார். தேவர்சோலைக்குஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக தேவர் சோலை டீ எஸ்டேட் மானேஜர் தோழர் ஸ்வேயின் நின்றார் இவரை எதிர்த்து காங்கரஸ் டிக்கட்டில் தோழர் கருப்பன் நின்றார். முன்னவருக்கு103வோட்டுகளும் காங்கரஸ் அபேட்சகருக்கு28வோட்டுகளும்கிடைத்ததால் தோழர் ஸ்வேயின் வெற்றிபெற்றார்.

## கும்பகோணத்தில் தீ விபத்து.

### 10000 ரூபாய் நஷ்டம்.

### 90 வீடுகள் நாசம்.

(ஒரு நிருபர்)

கும்பகோணம், மே. 29.

நேற்று காலை 10-மணிக்கு தெற்கு வீதி ஆஸ்பத்திரிக்குப் பக்கத்திலுள்ள 89 வீடுகள் தீப்பிடித்து எரிந்து சாம்பலாயின. இவ்விபத்தினால் ரூ. 10000 நஷ்டமேற்பட்டிருக்கலாமென்று யூகிக்கப்படுகிறது.

வீடிழந்து தவிக்கும் மக்களுக்கு தோழர் சி. ரங்கசாமி முதலியார் (வைஸ் சேர்மன்) முயற்சியால் சாப்பாடு வசதிகள் அளிக்கப்பட்டது.